முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

**மகான் திரிகோணச்சித்தர் அருளிய ஒளி சூட்சும நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

15.09.2018, சனிக்கிழமை

1. **கலியுகம் தன்னில் இல்லற ஞானம்**
**கடைத்தேறும் என்று அருளியே**
**அழியாமை உயர் ஞானமருளும்**
**ஆறுமுக அரங்கமகா ஞானியே**

2. ஞானியே உன்னால் இல்லறத்தாரும்
ஞானிகள் ஆவர் என்று கூறி
இனிமைபட ஒளி சூட்சும நூலை
இயம்பிடுவேன் **விளம்பி யாளி திங்கள்**

3. **திங்களிலே முப்பான் திகதி காரி வாரம்**
**(விளம்பி வருடம் ஆவணி மாதம் 30ம் நாள் 15.09.2018, சனிக்கிழமை)**
**தெரிவிப்பேன் திரிகோணச்சித்தர் யானும்**
இங்கனமே ஓங்கார உலகம் அமைய
இல்லறத்தார்களின் பங்காய் உரைப்பேன்

4. உரைக்கவே மாயை அல்லலை
உயர்விலா உயிர்க்கொலை தீநெறிகளை
திரையென விலக்கி இல்லறத்தார்கள்
தெய்வீகம்பட ஏகபத்தினி விரதனாய்

5. ஆகவே ஒழுக்க நெறி பிறழா
ஆன்மீக ஞான தயை சிந்தையோடு
அகவாழ்வு சுகபோகம் கொண்டு
அறமோடு இல்லறம் நடத்தி

6. நடத்தியே எந்தவொரு உயிர்கட்கும்
நலிவு அவமதிப்பு தரா வண்ணம்
இடரில்லா அன்பு நெறி அருள்நெறிபட
இல்லறம் நடத்தி உலக சேவையில்

7. சேவையில் இணைந்து ஈடுபாட்டை
சிவராஜ யோகி அரங்க ஞானி
அவைதனில் இடம் பெற்று நன்கு
அனுதினம் வேலவன் பால் பூசை செய்து

8. செய்து கொண்டு சம்பத்துகளுடன்
சைவநெறி மீறா வாழ்ந்து
மெய்ஞான உணர்வை வளர்த்து
முருகனே ஞானத்தலைவனெனும்

9. எனும் ஞானத் தெளிவு கூட்டி
எக்காலமும் எந்தச் சூழலிலும்
ஞானதேசிகனே உயர் குருவெனும்
நற்சிந்தை அறிவு முதிர்ச்சி காண

10. காணவே ஆறுமுக அரங்க ஞானியிடம்
கடைத்தேற்றும் திருவடி தீட்சை
ஞானமோடு இல்லறத்தார்கள் ஏற்று வர
ஞானிகள் ஆகும் வாய்ப்பு கிட்டி

11. கிட்டியே ஆறுமுகன் ஆளுமை
குன்றாத ஞான ஆட்சி காலம்
திட்டமுடன் இல்லற ஞானிகளாக இடம் பெறுவர்
தெரிவித்த ஒளி சூட்சும நூல் முற்றே.

–சுபம்–

**முருகப்பெருமான் துணை**

**மகான் திரிகோணச்சித்தர் அருளிய ஒளி சூட்சும நூலின் சாரம் :**

கலியுகத்தினில் இல்லற ஞானமும் கடைத்தேறும் என்று அருள் செய்தே அழியாமையாகிய மரணமிலாப் பெருவாழ்வு எனும் உயர் ஞானம் அருளும் ஆறுமுக அரங்கமகா தேசிக மகா ஞானியே உமது அளவிலாத கருணையினால் இல்லறத்தார்களும் ஞானிகளாக ஆகிடுவார்கள் என அரங்கா உமது புகழை உலகமெலாம் கூறியே உலக நலம் கருதி உலகினில் முருகப்பெருமானின் ஞானஉலகம் அமைந்திட இல்லறத்தார்களின் பங்கு குறித்து ஒளி சூட்சும நூல்தனையே **விளம்பி வருடம் ஆவணி மாதம் 30ம் நாள் 15.09.2018, சனிக்கிழமையான** இன்றைய தினமதனிலே திரிகோணச்சித்தர் யானும் யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் திரிகோணச்சித்தர்.

கலியுகத்தின் மாயையினால் உண்டாகும் துன்பங்களை விலக்கிடவும், எக்காலத்தும் உயர்வினை தராததுமான பாவங்களை சூழச் செய்யும், உயிர்க்கொலை தவிர்த்து, புலால் மறுத்து சுத்த சைவ உணவை மேற்கொண்டு தீயநெறிகளை விலக்கி இல்லறத்தில் உள்ளவர்கள் தெய்வீகம்பட ஏகபத்தினி விரதமாய் இல்லற ஒழுக்க நெறி மீறாமல் வாழ்வதுடன் ஆன்மீக ஞான தயைசிந்தையோடு அகவாழ்வினில் சுகபோகம் கொண்டுமே இல்லறம்தனை அறத்தினோடு நடத்தி எந்த ஒரு உயிர்களுக்கும் துன்பம் தராமலும் உலக மக்களிடத்தில் துன்பம் அளிக்காமலும் அவமதிப்பு தராமலும் நடப்பதோடு இடர்கள் ஏதும் இல்லாத வகையில் அன்பு நெறிபட அருள்நெறிபட இல்லறம் நடத்தி உலக சேவையில் இணைந்து ஈடுபாட்டை அதிகப்படுத்தி சிவராஜயோகி ஆறுமுக அரங்கமகா தேசிக ஞானியின் ஞான அவையில் இடம் பெற்று நாள்தோறும் தவறாமல் முருகப்பெருமான் மீது தவறாமல் பூஜைகளை செய்து வருவதுடன் நல்ல செல்வங்களுடன் சைவநெறி மீறாமல் வாழ்ந்து முருகப்பெருமானே ஞானத்தலைவன் எனும் ஞானத்தெளிவினை அதிகமாக்கி மெய்ஞான உணர்வை வளர்த்து ஞானத்தெளிவினை பெருக்கி எக்காலத்திலும் எந்த சூழ்நிலையிலும் ஞானதேசிகன் ஆறுமுக அரங்கமகா தேசிகனே உயர் ஞானகுரு என்கிற நற்சிந்தையும் அறிவு முதிர்ச்சியும் காண வேண்டும்.

நற்சிந்தை, அறிவு முதிர்ச்சி காண்க வேண்டுமாயினும் அவரவரும் ஆறுமுக அரங்கமகா தேசிகனிடத்து கடைத்தேற்றும் வண்ணம் திருவடி தீட்சைதனை ஏற்று ஞானிகள் ஆகும் வாய்ப்பை பெறுவார்கள். உலகினில் பெருமாற்றம் ஏற்பட்டு ஆறுமுகன் ஆட்சியானது ஞானஆட்சி காலமாக மாறிடும். திட்டமுடன் இல்லற ஞானிகளாக இடம் பெற்று சிறப்படைவார்கள் என தமது ஒளி சூட்சும நூல் மூலம் உலகறிய உரைக்கின்றார் மகான் திரிகோணச்சித்தர்.

–சுபம்–